இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு, 'நான் உங்களோடு இணைந்து இருப்பது போல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள். கிளைகள் திராட்சைக் கொடியோடு இணைந்து இருந்தாலன்றித் தானாகக் கனி தர இயலாது. அதுபோல நீங்களும் என்னோடு இணைந்திருந்தாலன்றிக் கனி தர இயலாது. நானே திராட்சைக் கொடி; நீங்கள் அதன் கிளைகள். ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார். என்னைவிட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது என்றார். (யோவான் 15:4-5)

# உலகளாவிய பசியை அகற்ற நாடுகளுக்கு திறந்த மடல்

**வத்திக்கான்**: உலகெங்கும், பசி, பட்டினி, மற்றும், பஞ்சத்தால் வாடுகின்ற கோடிக்கணக்கான மக்களுக்கு உடனடி உதவிகள் வழங்கப்படுமாறு, உலகளாவிய கத்தோலிக்க காரித்தாஸ் நிறுவனம் உட்பட, நூற்றுக்கணக்கான சமய அமைப்புகள், நாடுகளின் தலைவர்களுக்கு விண்ணப்பம் ஒன்றை விடுத்துள்ளன.

உலகளாவிய காரித்தாஸ் நிறுவனம், 263 சமய, மற்றும், சமுதாயநல அமைப்புக்களுடன் இணைந்து உலகத் தலைவர்களுக்கு எழுதியுள்ள திறந்த மடலில், உலகின் பல்வேறு பகுதிகளில், வறட்சி மற்றும், பசிக்கொடுமையை எதிர்நோக்கும், ஏறத்தாழ இருபத்தேழு கோடி மக்களுக்கு ஆதரவாகச் செயல்படுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

உலகில் நிலவும் பசிக்கொடுமை, மற்றும், மக்களின் உயிரிழப்புகள் மேலும் இடம்பெறுவதை தடைசெய்வதற்கென, ஆயுதமோதல்கள் இடம்பெறும் பகுதிகளில், போர் நிறுத்தத்திற்கு ஐக்கிய நாடுகள் நிறுவனம் விடுத்துவரும் அழைப்பை, தாங்களும் மீண்டும் வலியுறுத்துவதாக, அந்த அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன.

பசி, அகற்ற முடியாதது அல்ல. பசிப் பிரச்சனை தீர்க்கப்பட முடியாதது



மொசாம்பிக்கில் மனிதாபிமான நெருக்கடி (ANSA)

அல்ல, மாறாக, அதற்கு, ஆயுதமோதல்கள், வன்முறை, சமத்துவமின்மை, காலநிலை மாற்றம், நிலங்கள் இழப்பு, வேலையிழப்பு, கோவிட்-19 போன்றவையே காரணங்கள் என்று, அந்த அமைப்புகள், உலகத் தலைவர்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

உடனடி உணவு உதவிபஞ்சம், மற்றும், பட்டினி நிலை உருவாவதற்கு மனிதரின் செயல்பாடுகளே காரணம் என்றும், இந்நிலை மேலும் மோசமடைவதைத் தடுப்பதற்கு, நமது நடவடிக்கைகள் அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ள அந்த அமைப்புகள், தற்போதைய நெருக்கடி நிலைகளைக் களைவதற்கு, கூடுதலாக, 550 கோடி டாலர் நிதியுதவி வழங்கப்படுமாறு வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

### உலகளாவிய போர் நிறுத்தம்

உலக அளவில் இடம்பெறும் ஆயுத மோதல்கள் மற்றும், வன்முறைகளின் அனைத்து வடிவங்களை முடிவுக்குக் கொணரவும், போர் நிறுத்தம் இடம் பெறவும், முயற்சிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று அரசுகளைக் கேட்டுக் கொண்டுள்ள அந்த அமைப்புகள், 2019-ம் ஆண்டிலிருந்து உணவுப் பாதுகாப் பின்மையால் துன்புறும் மக்களின் எண்ணிக்கை இருமடங்காகியுள்ளவேளை, உணவுப் பாதுகாப்பின்மை நீக்கப்படுவதற்கும் நடவடிக்கைகள் அவசியம் என்று, தங்களின் திறந்த மடலில் கூறியுள்ளன.

மேரி தெரேசா: வத்திக்கான் செய்திகள்

## பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களுக்கு ஆதரவாகப் போலீஸ்சில் புகார்

**கோலாலம்பூர்**: நாட்டில் கிறிஸ்துவர்களுக்கும் முஸ்லீம்களுக்கு இடையில் விரோதத்தை ஏற்படுத்த நமது பேராயர் ஜூலியன் லியாவ் விரும்பியுள்ளார் எனக் கூறும் காணோளியை 'வன்ம' நோக்கோடு பதிவேற்றம் செய்த "Hud Hud Crew" என அழைக்கப்படும் முகநூல் சொந்தக்காரருக்கு எதிராக ஓர் அரசு சேரா இயக்கம் வியாழக்கிழமை (29.04.21) போலீஸ்சில் புகார் செய்தது. இனங்களுக் கிடையில் குறிப்பாக கிறிஸ்துவர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையில் பதற்ற நிலையை உருவாக்க, அந்த முகநூல் பக்கத்தில் வெளியிடப்பட்ட செய்தி உண்மைக்குப் புறம்பானது, அவதூறானது, தேசநித்தனையானது என போலீஸ்சில் புகார் செய்த North-South Initiative (NSI) இயக்கத்தின் நிர்வாக இயக்குநர் அட்ரின் பெரேரா கூறினார்.

2014-ம் ஆண்டு பேராயர் ஜூலின் லியாவ் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை 4 நிமிட காணோளியாக தமது முகநூலில் வெளியிட்டு, முஸ்லீம்களுக்கு எதிராக 25 ஆண்டு கால திட்டத்தைப் பேராயர் தயாரித்திருப்பதாக, அந்த முகநூல் சொந்தக்காரர் குற்றஞ்சாட்டியுள்ளார். "அல்லா" என்ற வார்த்தை மீதான சர்ச்சையும் அதில் ஒரு பகுதி என்றும் அவர் அவதூறாக எழுதியுள்ளார்.

கத்தோலிக்க வழக்கறிஞர் மன்றமும் இதனை வன்மையாக கண்டித்து அறிக்கை வெளியிட்டிருக்கிறது. மலேசியக் கத்தோலிக்க திருஅவையின் புனிதத்தையும். பேராயர் ஜூலியன் லியாவ்வின் நற்பெயரையும் பாதுகாக்க, வஞ்ச



பேராயர் ஜூலின் லியாவ்

எண்ணத்தோடு வெளியிடப்பட்ட அந்த காணோளியையும் அந்த முகநூல் சொந்தக்காரரையும் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகள் விசாரிக்க வேண்டும் என கத்தோலிக்க வழக்கறஞர் மன்றம் கேட்டுக் கொண்டது.

- அந்தோணி இன்னாசி

## கிறிஸ்துவின் திருஅவையை கட்டியெழுப்புவதில் அருள்பணியாளர்கள்

**வத்திக்கான்**: புதிய அருள்பணியாளர்கள், தாங்கள் மகிழ்வுடன் பெற்றுள்ள இறைவார்த்தையை மற்றவர்களுக்கு வழங்குவதோடு, தாங்கள் கற்பிப்பதை தங்கள் வாழ்விலும் கடைபிடிக்க வேண்டுமென்ற அழைப்பை முன்வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அதன் வழியாக இவர்களின் போதனை மற்றவர்களுக்கு ஊட்டச்சத்தாகச் செயல்படுவதுடன், இறைவனின் இல்லத்தை கட்டியெழுப்பு உதவுவதாக இருக்கும் என எடுத்துரைத்தார்.

தங்கள் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் இறைமகனின் மரணம் மற்றும் உயிர்ப்பின் மறையுண்மையை பகிர்வதன் வழியாக, புதிய வாழ்வின் தன்மையோடு இறைவனோடு நடந்து செல்லவேண்டுமென்ற அழைப்பையும், புதிய அருள்பணியாளர்களுக்கு முன்வைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருமுழுக்கு வழங்குவதன் வழியாக திருஅவைக்கு புதிய அங்கத்தினர்களைக் கொணரும் அருள்பணியாளர்கள், ஒப்புரவு அருளடையாளம் வழியாக மன்னிப்பை வழங்குகின்றனர், புனித எண்ணெய் வழியாக நோயாளிகளின் துயரை நீக்க உதவுதல், வழிபாட்டுக் கொண்டாட்டங்கள் வழியாக இடம்பெறும் இறைவேண்டல், மற்றும் விண்ணப்பங்கள் வழியாக இறைமக்கள், மற்றும் உலகமக்களனைவரின் குரலாக செயல்படுகின்றனர் அருள்- பணியாளர்கள், என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தங்களுக்காக அல்ல, மாறாக, கிறிஸ்து-



வுக்காக, இயேசுவின் குருத்துவப் பணியை உண்மையான பிறரன்புடன் நிறை வேற்றுங்கள் என புதிய அருள்-பணியாளர்களிடம் விண்ணப்பித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், காணாமல்போன தன் ஆட்டை, தேடிவந்த இயேசு, பணிவிடை பெற அல்ல, மாறாக பணிவிடை புரியவே வந்தார் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள் என அழைப்பு விடுத்தார்.

கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான்

# குடும்ப மகிழ்வு செயல்வழி வெளிப்படும்

திருஅவை வரலாற்றில் திருத்தந்தையர் வெளியிட்டுள்ள மிக நீண்ட மடல்களில் ஒன்றாக, **“அன்பின் மகிழ்வு**' திருத்தூது அறிவுரை மடல் விளங்குகிறது. 'அன்பு நன்மை செய்யும்' என்ற பண்பில் பொதிந்துள்ள எண்ணங்களை எண்கள் 93 & 94 ஆகிய இரு பத்திகளில், இவ்வாறு திருத்தந்தை பிரான்சிஸ் பதிவு செய்துள்ளார்:

நன்மை செய்யும்' என்று பொருள்படும் 'chrest' என்ற கிரேக்கச்சொல், விவிலியம் முழுவதிலும், ஒரே ஒரு இடத்தில் மட்டுமே பயன் படுத்தப்பட்டுள்ளது. இச்சொல், 'நல்லவர் ஒருவர், தன் செயல்கள் வழியே, தன் நன்மைத்தனத்தை வெளிப்படுத்துகிறார்' என்ற பொருளை உணர்த்தும், பவுல் அடிகள் பயன்படுத்தியுள்ள 'பொறுமை' ஒன்றும் செய்யாமல் இருக்கும் பண்பைக் கொண்டதல்ல. மாறாக, பிறருக்காக நற்செயல்கள் ஆற்றும் பண்பைக் கொண்டது. (93)

இப்பகுதி முழுவதிலும், திருத்தூதர் பவுல், 'அன்பு' என்பது, வெறும் உணர்ச்சி அல்ல என்பதை வலியுறுத்த விழைகிறார். எபிரேய மொழியில், 'அன்பு செய்தல்' என்பது, 'நன்மை செய்தல்' என்ற பொருளில் புரிந்து கொள்ளப்படுகிறது. "அன்பு, சொற்களை விட, செயல்கள் வழியே அதிகம் உணர்த்தப் படுகிறது" என்று, லொயோலாவின் புனித இக்னேசியஸ் கூறியுள்ளார். திரும்பப் பெறுவோம் என்ற எதிர்பார்ப்பு ஏதுமின்றி, கொடுப்பதிலும், பணிபுரிவதிலும் கிடைக்கும் தூய ஆனந்தத்தால், பிறருக்கு நன்மைகள் செய்வதே, 'அன்பு நன்மை செய்யும்' என்ற பண்பு அடங்கியுள்ளது. இந்த செயல்வடிவம் பெறும் அன்பே குடும்பங்களைக் கட்டி எழுப்பும்.

(அன்பின் மகிழ்வு 93,*94)*

**55-வது அனைத்துலக தொலைத்தொடர்பு தினம் எதிர்வரும் மே மாதம் 16-ஆம் நாள் கொண்டாடப்படுகிறது.**

**கருப்பொருள்:**
**'வந்து பாருங்கள்'**

# ஐந்து அருள்பணியார்கள் கோவிட்-19 தொற்றுக்குப் பலி

**வத்திக்கான்**: இந்தியாவின் ஒரு மாநிலத்தில் ராஞ்சி மறைமாவட்டத் திலிருந்து கோவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்ட ஏழு அருளபணியாளர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர்.

ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள டும்கா மறைமாவட்டமும் 10 நாட்களில் ஐந்து அருள்பணியாளர்களை COVID-19 க்கு இழந்துள்ளது என்ற செய்தியும் வெளியாகியுள்ள வேளையில், மேலும் சிலர் பாதிப்புக்கு உள்ளாகலாம் என்றும் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## அருளாளர் தேவசகாயம் உட்பட ஏழு புதிய புனிதர்கள்

**வத்திக்கான்**: அருளாளர் தேவசகாயம் உட்பட, திருஅவையின் ஏழு அருளாளர் களை, புனிதர்களாக உயர்த்துவது, அதற்குரிய நாளை நிர்ணயிப்பது ஆகியவை குறித்து விவாதிக்க, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மே



மாதம் 3-ம் தேதியன்று, கர்தினால்கள் அவையை கூட்ட உள்ளார். இந்தியாவின் கன்னியாகுமரி மாவட்டத் தில் மறைசாட்சியாக கொல்லப்பட்ட அருளாளர் தேவசகாயம் அவர்கள் உட்பட, 7 பேருக்கு புனிதர் பட்டம் வழங்கப்படவுள்ளது.

இந்த ஏழு அருளாளர்களுள் தேவசகாயம் மட்டுமே பொதுநிலையினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அப்போஸ்தலர் என்பதற்கும் சீடர்கள் என்பதற்கும் வேறுபாடு உண்டா? விளக்கவும்.

**திருமதி சோமாலை, கிள்ளான்**

சீடர் என்பவர் ஒரு குருவைப் பின்பற்றி, அவரோடு தங்கி, அவரின் போதனைக் கேட்டு. அவரில் வளர்ச்சியடையும் மாணவர். இயேசுவின் சீடர்கள் அவ்வாறே, இயேசுவிவோடு தங்கி, போதனைகளைக் கேட்டு, அவரில் வளர்ச்சியடைந்தனர். சீடர்கள் காலமுழுவதும் குருவோடு இருக்க வேண்டிய அவசியம் அல்லது நிபந்தனை கிடையாது. போதனையைப் பெற்றதம் அல்லது வித்தையைக் கற்றதும் குருவை விட்டுப் பிரியலாம்.

அப்போஸ்தலர் என அழைக்கப்பட்டோரை இப்போது தமிழ் சொல்லில் திருத்தூதர் எனகிறோம். கிரேக்க மொழியில் அப்போஸ்தொலோஸ்' (apostolos) என்றால் தூதுவர் அல்லது அனுப்பப்பட்டவர் என பொருள்படும் சொல்லிலிருந்து இச்சொல் பிறந்தது. அப்போஸ்தலர்கள் சீடர்களை விட சற்று மாறுபட்டவர்கள். இவர்கள் குருவால் அழைக்கப்பட்டு, அவரிடம் பயிற்சி பெற்று, வளர்ச்சியடைந்து பின்னர் அதே குருவால், அவரின் பணியைத் தொடர அனுப்பப்படுபவர்கள். இவர்கள் குருவை மிஞ்சிய சீடர்களாக இருக்க இயலாது. இயேசுவின் அப்போஸ்தலர்கள் அல்லது திருத்தூதர்கள் என்று அழைக்கப்பட மூன்று தகுதிகள் வேண்டும்.

### முதலாவது அவர்கள் இயேசுவால் நேரடியாக அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

திருத்தூதர் என்றால் முதலில் அவர் கடவுளால் அல்லது இயேசுவால் நேரடியாக அழைக்கப்பட்டிருக்க வேண்டும். 12 சீடர்களும் இயேசுவால் நேரடியாக அழைக்கப்பட்டவர்கள். ஆனாலும், பவுல் இயேசவால் தமாஸ்குஸ் செல்லும் வழியில் நேரடியாக இயேசுவால் அழைக்கப்பட்டார் என்பதற்கும் ஆதாரம் உண்டு (திப 9:3-9)

### இரண்டாவது, இயேசுவோடு தங்கி இருக்க வேண்டும்

இயேசு அழைத்த 12 திருத்தூதர்களும் அவரோடு ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் அவரோடு தங்கியிருந்தனர். ஆனால், பவுல் மட்டும் இயேசுவைக் காணாதவர். அப்படியிருக்க இவர் எப்படி திருத்தூதர் ஆனார் எனும் கேள்வி எழுக்கூடும். கலாத்தியர் 1: 15-17 வரை உள்ள பகுதியில் தாம் தமாஸ்கு போகும் வழியில் இயேசுவை சந்தித்த உடனே, அவர் அரேபியாவுக்குச் சென்று மூன்று ஆண்டுகள் இயேசுவோடு தவமிருந்தார். இது இயேசுவோடு தங்கியிருக்க வேண்டும் என்ற நிபந்தனையைப் பூர்த்தி செய்வதாக அமைகிறது.

### மூன்றாவது, இயேசுவால் பணிக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும்

இயேசவின் பிரியாவிடையின் போது அனைத்து திருத்தூதர்களையும் உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவிக்க அனுப்பினார். பவுல் தமஸ்குவில் இயேசுவைச் சந்தித்தப்பின் பார்வை இழந்தார். அவ்வேளையில் அனனியாவிடம் இயேசு, “நீ செல். சவுல் (பவுல்) பிற இனத்தவருக்கும் அரசருக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் முன்பாக எனது பெயரை எடுத்துச் செல்ல நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட கருவியாய் இருக்கிறார்" (திப 9:15)என்றார். இதிலிருந்து பவுல் அடிகளும் இயேசுவால் குறிப்பாக புறவினத்தார் மத்தியில் மறைப்பரப்புப் பணிக்கு அனுப்பப்பட்டார் என்பது ஏற்கப்படுகிறது.

இந்த காரணங்காளல் , கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தில் 1:1-2 வரை உள்ள பகுதியில் புனித பவுல் தன்னை ஒரு திருத்தூதர் என்று அழைத்துக்கொண்டதை வாசிக்கிறோம். ஆனாலும், தொடக்கக் காலத்தில் பவுல் அடிகளை சில யூதக் கிறிஸ்தவர்கள் பவுல் திருத்தூதர் அல்ல என்று வாதிட்டனர்.

இயேசுவோடு இருந்த 12 பேரும் இயேசுவால் அழைக்கப்பட்டு, அவரோடு தங்கி, அவரால் பணிக்கு அனுப்பப்பட்டவர்கள். எனவே அவர்கள் ஆரம்ப காலத்தில் சீடர்களாக இருந்தாலும் பின்னர் திருத்தூதர்கள் ஆனார்கள். திருத்தூதர்களைச் சீடர்கள் என்று அழைக்கலாம் ஆனால் எல்லா சீடர்களும் திருத்தூதர்கள் அல்ல.

நாம் அனைவரும் இயேசுவால் அழைக் கப்படிருந்தாலும், நாம் சீடர்களே. திருத்தூதர்கள் அல்ல.

-ஆர்.கே.

# இயேசுவில் இணைந்தால் கனிகள் காண்போம்

பெரிய வியாழக்கிழமை அதாவது இராவுணவின் போது தமது பன்னிரு சீடர்களுக்கு ஆறுதலும் ஊக்கமும் அளிக்கும் வகையில் இயேசு பேசுவதை இன்றைய நற்செய்தி குறிப்பிடுகிறது. விண்ணகப் பாதையை நோக்கி சீடர்கள் மனம் தளராது உறுதியுடன் பீடுநடைப் போட வேண்டிய காலக்கட்டம் வந்து விட்டதால், ஊக்கமளிக்கும் வகையில் இயேசு பேசுகிறார்.

உண்மையிலேயே கிறிஸ்துவ வாழ்க்கை வாழ்வது எளிதல்ல என்பது நமதாண்ட-வருக்கும் தெரியும். சிந்தையைச் சிதைக்கும் சக்திகள் பல கோணத்தில் நம்மைத் தாக்கும். சோதனையில் விழாமல் நடக்க நினைக்கும் நமக்கு சிரமங்களும் இடையூறுகள் கண்முன்னே வந்து நிற்கும். அறிவியல்-தொழில் நுட்ப வேடத்திலும் வந்து நமது சீரான எண்ணத்தையும் நேர்கொண்ட பாதையையும் சிதறடிக்கும். உலக மாயக் கவர்ச்சிகளில் நம்மை சிக்க வைக்கும். இன்று நாம் எதிர்நோக்கும் சவால்களையும் சிரமங்களையும் அன்று பன்னிருத் திருத்தூதர்களும் வேறு விதமாக எதிர்நோக்கினர். இன்றைய நிலை மோசமாக உள்ளது என நாம் கூறலாம், ஆனால் அலசிப் பார்த்தால் நாம் அனைவரும் ஒரே குட்டையில் மிதக்கும் மட்டைகளாக இருக்கின்றோம். மனிதனின் மனநிலை ஒன்றே. அன்றும் சரி இன்றும் சரி, சவால்களையும் சிரமங்களையும் எதிர்கொள்வதற்கு இயேசு கூறும் மருந்து ஒன்றே. “என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும்" (யோவான்15:7)

கடந்த வாரம் 'நல்ல ஆயன் நானே' (யோவான்10:14) என இயேசு கூறக் கேட்டோம் அதே ஆண்டவர் இன்று நமக்கு மற்றொரு வாக்குறுதியையும் அளிக்கிறார். "ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைத்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார்" (யோவான்15:5). அந்த கனி, அன்பாக, மன்னிப்பாக, இரக்கமாக இருக்கலாம். அதே இராவுணவில் இவ்விரு உவமைகளின் மத்தியில், திருத்தூதர்களின் பாதங்களைக் கழுவி, அவர்கள் மீதான தமது அன்பை வெளிப்படுத்துகிறார் இயேசு. ஒருவர் மற்றொருவர் பாதத்தைக் கழுவக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றார். பெறுவதை விடுத்து, கொடுப்பதற்கு கற்றுக் கொள்ள வேண்டும். அன்பு, மன்னிப்பு, இரக்கம் ஆகிய நற்குணங்கள் திருக்கூட்டத்தை உருவாக்கும்.

பிறரை ஏற்றுக்கொள்ளும் குணத்தாலே, கிறிஸ்துவர்களைத் துன்புறுத்தி சித்ரவதைச் செய்த பவுல், திருத்தூதர்களில் ஒருவராக ஏற்றுக்கொள்ளப்படுகிறார் என முதல் வாசகம் (திப.9:26-31) கூறுகின்றது. இயேசு காட்டிய இரக்கத்தால் மனம் மாறிய பவுலுக்கு 'மனச்சான்று குற்றவாளி எனத் தீர்ப்பளித்தாலும் கடவுள் திருமுன் மனதை அமைதிப்படுத்த முடிந்தது' (1யோவான்3:20) என இரண்டாம் வாசகம் குறிப்பிடுகிறது. ஆண்டவரது அழைப்பை யாரும் ஏற்றுக்கொள்ளலாம். ஏற்றுக் கொள்ளப்படுபவர் அவரது கனிதரும் திராட்சை செடியின் கொடிகளில் ஒன்றாக இருப்பார். திராட்சை செடியில் கொடியாக இணைந்திருந்தால் மட்டுமே மிகுந்த கனி தர முடியும். இயேசு எனும் திராட்சை செடியில் ஆயிரம் ஆயிரம் கொடிகள் இருக்கின்றன. அவை அனைத்தும் மிகுந்த கனி தரும் கொடிகள். ஏனென்றால் கனிகொடாத கொடிகள் தறித்து விடப்படும். திராட்சை செடியில் இணைந்திருக்கும் அத்தனை கொடி-களையும் அவர் காக்கின்றார்.

கடந்த வாரம் 'நல்லாயனாக' என்றும் இருப்பேன் என நம்பிக்கையூட்டிய ஆண்டவருக்குக் கைமாறு அளிக்கும் பிள்ளைகளாக நாம் மாற வேண்டுமென இவ்வாரம் 'திராட்சை செடியாக' வந்து வலியுறுத்துகிறார். ஆண்டவருக்கு நம்மால் கைமாறு அளிக்க முடியுமா? முடியவே முடியாது. ஆனால் ஆண்டவர் வேண்டுவதெல்லாம், "நான் உங்களோடு இணைந்து இருப்பது போல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள்" (யோவான்15:4) என்பதே. ஆண்டவரோடு இணைந்து இருப்பதென்றால், "நாம் வெறும் சொல்லில் அல்ல, செயலில் உண்மையான அன்பை விளங்கச் செய்வோம்" (1யோவான்3:18) என இயேசுவின் அன்புச் சீடர் புனித யோவான் அறைகூவல் விடுக்கிறார்.

அதிகமானோர் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு இறைவேண்டல் மட்டுமே போதும் என்று நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், நம்பிக்கை வாழ்விற்கு இறை-வேண்டலோடு செயலும் இணைந்திருக்க வேண்டும். “நம்பிக்கை செயல் வடிவம் பெறவில்லை என்றால், அது தன்னிலே உயிரற்றது” ஆகிவிடும். (யாக் 2:17).

*எட்மண் பல்தசார், செராஸ் சிலாங்கூர்*

**பாஸ்கா காலம் 5-ஆம் ஞாயிறு**
திப: 9: 26-31
திபா: 22: 25b-26. 27,29. 30-31
1 யோவான் 3: 18-24
யோவான்: 15: 1-8
**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**

**வாரநாள் முதல் வாசகம்: I**
**திருப்புகழ் மாலை : வாரம் I**